முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1519

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.11.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. கருணை வடிவான அரங்கனே
   கலி இன்னல்களை போக்கும் தேசிகனே
   ஆறுமுகன் என் அவதார ஞானியே
   அண்ணலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
   உரைத்திடுவேன் சோபகிருது தேள் திங்கள் தன்னில்
   (சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 10 ம் நாள், 26.11.2023, ஞாயிற்றுக்கிழமை)
   வரமாக அரங்கனுள் யானிருக்க
   வையகத்தில் அரங்கனை நாடி
3. வரம்பெற வேண்டி வரும்
   தீட்சை பெறும் மக்களுக்கெல்லாம்
   எல்லோர்க்கும் ஆறுமுகன் என் ஆசி காட்சி
   இனிதே அரங்கன் வழியே நடந்தேறும்
4. நடத்துகின்ற அரங்கன் தர்மத்தை
   நண்மை கருதி உலகோர்
   பொருளுதவியாகவும் உடல் உழைப்பாகவும்
   தடையற செய்துகொண்டு தொடர்ந்தால்
5. தானவர்கள் எல்லாம் தவம் செய்யாமலே
   தவநிலையையும் தர்மத்தின் பலத்தைக் கொண்டே ஞானபலத்தையும்
   ஞானபலத்தையும் அரங்கன் ஆசியால் அடைந்து
   ஞானிகளாகின்ற வண்ணம் பெருமைபட
6. இந்த உலகில் பேரருள் வாய்ப்பு
   பிரணவக் குடில் தொடர்பாலே ஏற்பட கூடும்
   ஆகவே உலகோர் அரங்கனைச் சார்ந்து
   அறத்தை செய்து கொண்டு

7. வகைபட ஞானிகள் பூஜை செய்வதோடு
வல்லமைபட வாழுகின்ற காலம் சுத்த சைவ நெறியோடு
நெறிபட உலகோர்க்கு தொடர்பு தன்னை
நீதிமான் அரங்கன் காட்டும் தயவாக
8. வரையறை பேதமின்றி எடுத்துக்கொண்டு
வையகத்தில் ஞான வழி நடந்து வந்தால்
வருவோர்க்கு இனி பிறவா பேறு
வையகத்தில் அரங்கன் வழி நிகழக்கூடும்
9. கூடுமே உலகையே மாற்றும்
குறையில்லா ஞான பலமாக மெருகேறும்
ஏறவே அரங்கன் தொடர்பே
இவ்வுலகை மாற்றும் உயர்வழியாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–